www.padippakam.com

# சிந்தனைச் செய்தி

## ஆய்வு இதழ்

இதழாளர்
எழுத்தாளர்
தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்கத் தலைவர்



குன்றம். மு.இராமரத்நம்

இதழ் எண்: 21 ஏப்ரல் 96

படிப்பகம்

www.padippakam.com

★ இதழாளர், எழுத்தாளர், தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்கத் தலைவர் ★

# குன்றம். மு. இராமரத்நம்.

தாராமதி இதழைத். தொடர்ச்சியாக, அதற்கெனத் தனியாக அச்சகம் நிறுவி, விற்பனை நோக்கில்லாது, எழுத்தாளர்களுக்குத் தளம் அமைத்துக் கொடுத்து ஊக்குவித்து, சந்தாப்பணம் வருகிற -தோ இல்லையோ அதைப் பற்றிக் கவலைப்படாது அச்சாக்கித் தவறாது அனுப்பி வருபவர் குன்றம் அவர்கள்.

தாராமதி இதழின் 135 வது இதழ் ஏப்ரல் 96 ல் மலர்ந்துள்ளது.

விடாப்பிடியாக, எழுத்தாளர்களுக்கிடையே இணைப்பு தேவை என எழுத்தாளர் உறவுக்காக இயங்கி வருபவர்.

எழுத்தாள சகாக்களின் எல்லா விழாக்களிலும், தானே செலவு செய்து, சென்று, வாழ்த்தி வருபவர்.

செப்டம்பர் மாதம் வருகிற தன் பிறந்த நாளை மிகப் பெரிய இலக்கிய விழாவாக்கி, பல்வேறு நிகழ்வுகளையும், சிறப்பு வெளியிடு -களையும் வெளியிட்டு வருபவர்.

ஒரு எழுத்தாளராக, நாவல் [இரயிலுறவா], கவிதை [சிறை மீண்ட கவிதைகள்], சிறுகதை [சாத்தான் வேதம் ஓதுகிறது] — நூல்களை வெளியிட்டுள்ளவர்.

குறிஞ்சி மலர் பதிப்பகம் நிறுவி, ஒடுக்கப் பட்டவர்களுக்காக இதழ்வழி/நூல்வழி இயங்கி வருபவர்.

சிற்றிதழ்களின் ஒருங்கிணைப்பிற்காகவும், வளர்ச்சிக்காகவும் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்கத்தை நிறுவி, பதிவு செய்து, ஆண்டுக்குஒரு முறை ஆர்வலர்கள் உதவியுடன் விழா நடக்க ஏற்பாடு செய்து, 8 ஆண்டுகளாகத் தலைவராக இருந்து உற்சாகப்படுத்தி வருபவர்.

பண்பாளர், பழகுவதற்கு இனிமையானவர், இதழாளர், எழுத் -தாளர், சிற்றிதழ்களுக்காகச் சிந்திப்பவராகிய குன்றம் அவர்களை சிற்றிதழ்ச் செய்தி அட்டையில் வெளியிடுவதில் மகிழ்வடைகிறது.

முகவரி: குன்றம். மு.இராமரத்நம், புலமைப்பண்ணை, கோவை-7.



படிப்பகம்

www.padippakam.com

# சிற்றிதழ்கள் செய்ததும்: செய்யத் தவறியதும்.




தொடர் எண் : 7

— திரு. வ. லிக்சண்ணன். —

○ ஒரு மொழியின் வளர்ச்சிக்கும், அம்மொழியின் இலக்கியம், வளமும் புதுவனப்பும் புதியவேகமும் பெறுவதற்கும் மொழிபெயர்ப்பு இன்றியமையாத் தேவையாகும். பிற மொழிகளின் படைப்புகள் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை மறுமலர்ச்சி இலக்கியப் படைப்பாளிகள் ஆரம்பம் முதலே உணர்ந்திருந்தனர். அதனாலேயே 'தமிழின் மறுமலர்ச்சிக்குப் பொன் ஏர் பூட்டியவர்' என்ற பெருமையைப் பெற்ற மகாகவி பாரதியார், 'திக்கெட்டும் செல்வீர், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து சேர்ப்பீர்!' என்று அறிவுறுத்தினார். அவரும் கவிதை, சிறுகதை முதலியவற்றைத் தமிழில் சுமிதளவு மொழி பெயர்க்கவும் செய்தார்.

மணிக்கொடி எழுத்தாளர்கள் மொழி பெயர்ப்புப் பணியை மிக உற்சாகமாகவும் தீவிரமாகவும் செய்தார்கள். உலக இலக்கியச் செல்வங்களை ஆங்கிலத்தின் வழியாக ஏற்று, தமிழுக்கு அறிமுகம் செய்தார்கள். அவர்களுக்குப் பிறகு எழுதத் தொடங்கிய சீரிய இலக்கியவாதிகளும் கணிசமான அளவிற் மொழி பெயர்ப்புகளில் தங்கள் திறமையை ஈடுபடுத்தினார்கள்.

○ கால வேகத்தில், ஐரோப்பிய, அமெரிக்க, ரஷ்ய இலக்கியங்கள் மொழி பெயர்க்கப் படுவதோடு, — பல்வேறு இந்திய மொழிகளின்



படிப்பகம்

www.padippakam.com

படைப்புகளும் தமிழாக்கப்படுவது தவிர்க்க முடியாதது ஆயிற்று. இதில் வியாபார நோக்கில், விற்பனை அதிகமுள்ள பெரியபத்திரிகைகளும் மும்மரமாக ஈடுபட்டன.

பெரும்பாலும் இம் முயற்சிகள் பலவும் சிறுகதைகளையும், நாவல்களையும் மொழி பெயர்த்துத் தரும் பணியிலேயே கவனம் செலுத்தின. அபூர்வமாக ஒற்றையங்க நாடகங்கள் மொழிபெயர்க்கப் பட்டன. நீண்ட நாடகங்கள் தமிழாக்கப் பட்டது மிக்அபூர்வச் செயலாகவே இருந்தது. கவிதைகள் விஷயமும் அப்படித் தான்.

இலக்கியம், கலை, சமூகம், தத்துவம், பொருளாதாரம் முதலிய பல்வேறு வகைப்பட்ட சிந்தனைக் கட்டுரைகளை தமிழில் தருவதில் அந்நாளைய பத்திரிகைகள் ஆர்வம் கொண்டிருந்ததில்லை என்றே சொல்ல வேண்டும். டைஜஸ்ட் பாணியில் நடத்தப்பட்ட 'சக்தி' [நிர்வாக ஆசிரியர்: வை. கோவிந்தன்] என்ற மாதப் பத்திரிகையில் இத்தகைய பல நோக்குக் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு பிரசுரமாவது உண்டு.

இலக்கியம் சம்பந்தப்பட்ட பல வகையான கட்டுரைகளைக்கூட இலக்கியத்தின் போக்குகள் (ட்ரெண்ட்ஸ்). இலக்கியத் தத்துவங்கள் (இஸம்ஸ்) மற்றும் பல இலக்கியப் பிரச்சனைகள் பற்றிய சிந்தனைகளை — இலக்கியப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொண்டவைகள் வெளியிட முன் வந்ததில்லை.

1950 களிலிருந்து இந்த நிலைமை ஓரளவுக்கு மாற்றம்கண்டது என்று சொல்லலாம். சி.சு.செல்லப்பாவின் எழுத்து, க.நா.சு வின் இலக்கிய வட்டம், வ.விஜயபாஸ்கரன் நடத்திய சரஸ்வதி, தொ.மு.சி. ரகுநாதனின் சாந்தி ப.ஜீவானந்தம் தொடங்கி வைத்த தாமரை, முதலிய சிற்றிதழ்கள் பலவகைப்பட்ட கட்டுரைகளையும், வரவேற்றுப் பிரசுரம் செய்தன. தமிழில் எழுதப்பட்ட சுயமான கட்டுரைகளோடு, இத்தரத்து மொழி பெயர்ப்புக் கட்டுரைகளையும் அவை உற்சாகமாக வெளியிட்டன. சிறுகதை மொழி பெயர்ப்புகளோடு, கவிதைகளை மொழி பெயர்த்து வெளியிடுவதிலும் அவை கவனம் செலுத்தின.

என்றாலும் கூட, வழக்கத்தில் அதிகம் அடிபட்ட ரொமாண்டிசம், ரியலிசம், நேச்சுரலிசம், சர்ரியலிசம் போன்ற இலக்கியத் தத்துவங்களை வாசகர்களுக்கு — எழுத்தாளர்களுக்கே கூட விளங்கக் கூடிய, விதத்தில் விவரித்து எழுதப்பட்ட கட்டுரைகளை எந்தப்



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகையும் வெளியிட முன் வந்தில்லை. பிற் காலத்திலும் கூட. இது பெரும் குறையே யாகு .

உலக அரங்கில் மிகுந்த வெளிச்சம் பெற்ற அரசியல் தலைவர் களை ( ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின், சர்ச்சில், அமெரிக்க ஜனாதிபதிகள் முதலியோர் ) பற்றிய கட்டுரைகளை பத்திரிகைகள் வெளியிட்டு வந்த அளவுக்கு இலக்கியப் படைப்பாளிகள், தத்துவச் சிந்தனையாளர்கள் முதலியவர்களைப் பற்றிய கட்டுரைகள் பிரசுரிக் -கப் பட்டதில்லை. உலக நாடுகள், இயற்கை வளங்கள். அவற்றி -னூடே பிரயாணம் செய்தவர்களின் ரசமான அனுபவங்கள் போன்றவை (ரீடர்ஸ் டைஜஸ்ட், மற்றும் பல ஆங்கிலப் பத்திரிகை களில் வருவது போன்றவை) தமிழிலும் வர வேண்டும் என்று பத்தி -ரிகை நடத்தியவர்கள் ஆசைப்பட்டதில்லை.

இந்த இடத்தில் திராவிட இயக்கப் பத்திரிகைகள் பற்றிக் குறிப்பிட வேண்டும்,

ஈ. வெ. ரா. பெரியார் 1930 களில் நடத்திய குடியரசு, பகுத் -தறிவு ஆகிய சஞ்சிகைகள் தமிழில் பதிய சிந்தனைகள் புகுவதற்கு பெரிதும் துணை புரிந்தன. அவரது நாளிதழான விடுதலையும் கூட

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, திராவிடக் கழகம் உடைந்து பெரியார் கட்சியாகவும், அண்ணாதுரைக் கட்சியாகவும் மாறிய பின்னர், இக் கழகங்களைச் சேர்ந்த மேடைப் பிரசங்கி ஒவ்வொரு வரும் ஒரு பத்திரிகை தொடங்கி நடத்தினர். அதற்கு முன்னரே அண்ணாதுரையின் திராவிட நாடு வெற்றிகரமாக நடந்துகொண்டு இருந்தது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் பலவும் சிற்றிதழ்களே. ஜனார்த்தனத்தின் டார்பிடோ, நெடுஞ்செழியனின் மன்றம், அண்ணல் தங்கோவின் இதழ், சி.பி. சிற்றரசின் போர்வாள் கருணாநிதியின் முரசொலி, முத்தாரம், கண்ணதாசனின் தென்றல், இப்படிப் பல. இவற்றுடன் இலக்கிய இதழான பொன்னியும் சேரும்

இந்த இயக்கத்தினரின் எழுத்து வளர்ச்சிக்கும் வகைக்கும் அண்ணாதுரைதான் தடம் அமைப்பவராகவும்(ட்ரெண்ட் ஸெட்டர்) வழிகாட்டியாகவும் விளங்கினார், அவர் உலகச் சிந்தனையாளர்கள் பகுத்தறிவாளர்கள் பற்றி சுவாரஸ்யமாகக் கட்டுரைகள் எழுதினார். உலகப் பெரும் நாத்திகனான இங்கர்சால், ஏழைப்பங்காளன் எமிலி



படிப்பகம்

www.padippakam.com

ஜோலா, சமுதாய ஒப்பந்தம் பற்றி நூல் எழுதிய ரூசோ — மற்றும் அமெரிக்கக்கவி வால்ட் விட்மன் பற்றியெல்லாம் விரிவாக எழுதி-யுள்ளார். அவற்றைப் பின்பற்றி இதர பேச்சாளர்களும் இத்தகைய சிந்தனையாளர்களையும், புரட்சி வீரர்களையும் பற்றித் தமிழ்வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வந்தார்கள்.

இத்தகைய நல்ல முயற்சிகள் கால வேகத்தில் மேலும் தலை காட்டாது மறைந்து போயின.

[ வளரும் ]

கட்டுரையாளரின் முகவரி:— திரு. வல்லிக்கண்ணன், 10 எ பைப் பிளாட்ஸ், வள்ளலார் மார்டர்ன் பிளாட்ஸ், பதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு. சென்னை - 5. அ.கு.எண்: 600 005

---

○ தலித் இலக்கியம், பெண்ணியம், புலம்பெயர்ந்தோர் இலக்-கியம் என்று பேசும் இதழ்களும்/இலக்கியவாதிகளும், — அழுகிறவனின் ஒப்பாரியை ரசிக்கிற மாதிரி அழகியல்களை மெச்சுவதோடு நின்று விடுவதேன்? என்ற வினாவிற்கு பேராசிரியர் அப்துல் காதர் நிழல், (பேரணாம்பட்டு, 635 810) இதழின் நேர்காணலில்......

● தமிழ் நாட்டுல ஒரு சங்கடம் என்னான்னா இவன் ஒரு ரசிகன். அவ்வளவு தான். ஒருத்தன் அழுதிட்டு இருந்தான்னா அந்தக் கண்ணீர் முத்து முத்தா வருது பாருன்னு சொல்லுவான். ஓங்கி அறையலாம் போலிருக்கும். கண்ணீர் முத்து முத்தாப் வடிக் கிறாய் என்று நீளக்கூடிய பேனா ஒரு விரல்தான். அது அவன் கண்ணீரைத் துடைக்க நீளுமானால் இலக்கியம் பேசாமலே கூட இந்த விரல் செய்வது சரிதான். ஆனா ஒரு போபித்தனம் வந்திட்டிருக்கு. தமிழ்நாட்டுல என்னான்னா எதையும் ரசிக்கிறான். சோகம் அதிகமாகிப் போச்சுன்னா சும்மா அதைப்பத்தி நினைக்கிறானே தவிர, சோகத்தின் முழுக்காரணம், அதை துடைக்கக்கூடிய வழி முதலியவற்றைப் பற்றி நினைக்கிறதில்லே. இந்த இனம் ரொம்ப வீழ்ச்சியடைந்ததற்கான காரணம் இந்த குணம் தான். ரசனை தேவைதான், சுவை தேவை தான். எதையும் ரசிச்சுகிட்டு இருக்கிறதுன்னா அதுல அர்த்தமேயில்ல. இதிலேர்ந்து அதனுடைய உள் காரணத்தை நோக்கிப் போகனும். இலக்கியத்தினுடைய நோக்கமே அதுதான். ஆனா வெளி அழகில மட்டும் நாம மனசை செலுத்தினா அதனால பயன் கிடைக்காது.



படிப்பகம்

www.padippakam.com

# குடியரசு இதழில்

4-10-1931 குடியரசு இதழில் காரல் மார்க்ஸ், பிரடிரிக் ஏஞ்சல் வெளியிட்ட சமதர்ம அறிக்கையை, வெளியிட்டு அதற்கு முகவுரை -யாக தந்தை பெரியார் எழுதியுள்ளதிலிருந்து சில பகுதிகள். :—

எங்கு அளவுக்கு மீறிய, தாங்க முடியாத கொடுமை நடைபெறு -கின்றதோ அங்குதான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறு கொண்டு எழவும், சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும். எனவே, இந்த நியாயப்படி பார்ப்போமானால் உலக அரசாங்களிலெல்லாம் ரஷ்ய ஜார் அரசாங்கமே மிக்கக் கொடுங் கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலேயே அங்கு சமதர்ம முறை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டியதா -யிற்று. இந்த நியாயப்படி பார்த்தால், அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷ்யா தேசத்தைவிட, இந்தியாவுக்கே முதன் முதலாக ஏற்பட்டு இருக்க வேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாது இருப்பதற்கு இங்கு அநேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்ப -தாலும், சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதை -யாகவே கல்வி, அறிவு உலகஞானம், சுய மரியாதை உணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித் தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப் -பதே கடவுள் சித்தமென்றும், மோட்ச சாதனமென்றும் புகட்டி வந்ததாலும், அதே சூழ்ச்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச் செய்து வந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன் முதல் இந்தியாவிலே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று.

★★ இன உறவு ஆசிரியர் பெரு. எழிலழகன் குறிப்பு ★★

இனமுழக்கம் நான் நடத்திய பத்திரிகை. இதை திரு. எஸ். முத்து அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1959 ஆம் ஆண்டு கவிஞர் கண்ணதாசனுக்கு விற்று விட்டேன். ஆனால் இதுசமயம் இனமுழக் -கம் வராததால், இனமுழக்கத்திற்காக கோர்ட்டில் மனுச்செய்தேன் அது மறுக்கப்பட்டு, இனஉறவு எனப் பதிவு வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# ❀ நா. பா. வும் தீபமும் ❀

★— தி.க.சிவசங்கரன் —★

[13.12.87ல் நா.பா.இயற்கையெய்த தீபம் 1988 ஜன-பிப் இதழில்]

அருமை நண்பர் நா.பா. அமரராகி விட்டார் என்பதை நினைத்-துப் பார்க்கவே துயரமாக இருக்கிறது.

1964 டிசம்பர் 14 ல் நான் நிரந்தரமான சென்னை வாசியான போது, அவருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது.

கல்கியிலிருந்து விலகிய நா.பா., தீபம் என்ற பெயரில் இலக்கிய மாத இதழைத் தொடங்கப் போவதாகவும், அதற்கு நான் தொடர்ந்து எழுதவேண்டும் என்றும் கேட்டார். மகாகவி பாரதியின் லட்சியங்களைத் தாங்கி நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தீபம் பணியாற்றும்; எழுத்தாளனின் படைப்புச் சுதந்திரம் எவ்விதத்திலும் பாதிக்கப் படாது என்றார். எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

1965 ஏப்ரலில் தீபம் முதல் இதழ் வந்த பொழுது, உடனிருந்த பல எழுத்தாளர்கள் மற்றும் ஆதரவாளர்களில் நானும் ஒருவன். அந்த முதல் இதழில் என் கட்டுரை ஒன்றும் வந்துள்ளது. அதன்பின் மாலை வேளைகளில் அடிக்கடி தீபம் அலுவலகத்திற்குச் செல்வது என் வழக்கமாகி விட்டது.

மணிக்கொடி சீனிவாசன், தினமணி தினசரி ஆசிரியர் டி. எஸ் சொக்கலிங்கம், பேராசிரியர் நா. வானமாமலை, முன்னனி எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதன் முதலியோரைப் பேட்டி கண்டு கட்டுரைகள் எழுதினேன். அதன் பிறகு, தீபத்தில் வெளிவந்த இலக்கிக்கிய விவாதங்கள், புத்தக மதிப்புரைகள், இவற்றில் என் பங்கும் ஓரளவு உண்டு. கடந்த 23 ஆண்டுகளில் தீபத்துடன் எனது தொடர்பு இருந்து வந்தது. ஏதோ ஒரு வகையில் இனிய முறையில் வளர்ந்து வந்தது.

அந்தக் காலகட்டத்தில் மணிக்கொடி சீனிவாசன், தி.ஜ. ரங்கநாதன், வெ. சாமிநாதசர்மா போன்ற முதுபெரும் எழுத்தாளர்களின் ஆசியும் ஆதரவும் தீபத்திற்கு இருந்தன.

பிற்காலத்தில் பி.எஸ். ராமையா, கு.அழகிரிசாமி, சிட்டி, சிதம்பர சுப்ரமண்யம், சி.சு.செல்லப்பா, சோ. சிவபாதசுந்தரம், திருப்பூர் கிருஷ்ணன், சேவற்கொடியோன் போன்ற பல அன்பர்களின் ஆதரவும் தொடர்ந்தது. வல்லிக்கண்ணனின் எழுத்துக்கள் கடந்த 23 ஆண்டுகளாகத் தீபத்தில் இடையறாது வந்துள்ளன என்பது ஒரு மாபெரும் சாதனையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆதவன், இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், நாஞ்சில் நாடன், வண்ணதாசன் முதலிய பல எழுத்தாளர்களின் இலக்கிய மேடையாகத் தீபம் திகழ்ந்தது. சுருக்கச் சொன்னால் இமயம் முதல் குமரி வரையுள்ள எழுத்தாளர்களும், இலங்கை, மலேசியா எழுத்தாளர்களும் தீபத்தில் இடம் பெற்றுள்ளனர். தரமான எழுத்துக்களை வழங்கியுள்ளனர். தீபத்தை ஒரு தரமான இதழாக நடத்தவேண்டும் அதில் கலை இலக்கியம் பற்றிய ஆழமான விஷயங்கள்வரவேண்டும் என்பதில் ஆசிரியர் நா.பா.வும், துணை ஆசிரியர் திருமலையும் எப்போதும் தெளிவாக இருந்தனர் என்றே கூற வேண்டும்.

நல்ல இலக்கியத்தை வளர்ப்பதிலும், பண்பாட்டைச் சீரழிக்கும் நச்சு இலக்கியங்களை எதிர்த்துப் போராடுவதிலும் நா.பா. உறுதியாக இருந்தார். தமது எழுத்துக்கள், மேடைச் சொற்பொழிவுகள் எழுத்தாளர் அமைப்புகள் இவற்றின் வாயிலாக நா. பா. செய்துள்ள சீரிய பணிகளைத் தமிழ் மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர். நா.பா.வின் உன்னத லட்சியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலேயே தீபத்தின் ஒவ்வொரு இதழும் அமைந்துள்ளது.

சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், திறனாய்வு மற்றும் பல துறைகளில் இன்றைய தமிழ் இலக்கியம் வளருவதற்கு தீபம் ஆற்றியுள்ள அரும் பணிகளை இந்தச் சின்னஞ்சிறு கட்டுரையால் அளவிட இயலாது. இதழில் வந்துள்ள கதைகளும், கட்டுரைகளும் இரண்டு தொகுப்புகளாகப் பிரசுரமாகியுள்ளன. ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவில் இதழின் சாதனைக்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றன.

முதிய எழுத்தாளர்களுக்கு மட்டுமின்றி, இளம் எழுத்தாளர்களுக்கும் இடம் தந்து நவீனதமிழ்இலக்கியத்தின் ஒவ்வொருதுறைக்காகவும் சீரிய பணியாற்றியுள்ள தீபத்தின் சேவைகளை மனச்சாட்சியுள்ள எந்தத் தமிழ் எழுததாளனும், வாசகனும் மறக்க முடியாது.

நா.பா.வின் மறைவுக்குப் பின்னர், தீபத்திற்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தீபத்தின் வாழ்வுடன் தம் வாழ்வைப் பின்னிப் பிணைத்துள்ள ஆசிரியர் திருமலையின் வாழ்வும் எதிர்காலமும் ஒரு பெரிய கேள்விக் குறியாக உள்ளன. இத்தகைய துயரச் சூழ்நிலையில் தீபம் அணைந்து விடக்கூடாது. அதைக் காப்பதும், பேணி வளர்ப்பதும் நம் அனைவரின் கடமையாகும்; அமரர் நா,பா.வுக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

[ தற்பொழுது தீபம் இதழ் இல்லை - இழப்பு ஈடுசெய்ய முடியாததே ]



படிப்பகம்

www.padippakam.com

# சந்தேகங்கள்

இளங்குமரன்

மரம் முந்தியா, விதை முந்தியா? பெட்டை முந்தியா, முட்டை முந்தியா? ஒளி முந்தியா, இருள் முந்தியா? இவை பழைய கேள்விகள்; சந்தேகங்கள்! இவை இன்றைக்கும் திண்ணை வேதாந்திகள் நாவில் நடனமாடிக் கொண்டுதானிருக்கின்றன.

கேள்விகள் என்னவோ நல்ல கேள்விகள்தான். பதில்கள் என்னவோ புரியவில்லைதான்! உண்மை என்னவோ இருக்கிறது தான் ஏன் இந்த வாசகம் எப்படி இருக்கிறது? சந்தேக மனதிற்கு இதை விடத் தெளிவான வார்த்தைகள் எங்கிருந்து கிடைக்கும்?

தொந்தியைத் தடவிக் கொண்டு பிரமாதமாகப் பொழிகிறார்களே இவர்கள் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார்களாக்கும் என்று நினைத்துக் கொண்டு கேட்கப் போனாலோ, எல்லாம் மாயை என்று மூச்சுவிடாமல் பேசி, நமது புத்தியையும் ஒரு கலக்கு கலக்கி விடுகிறார்கள். என்ன மாயையோ. மாயமோ, நமக்கேன் பொல்லாப்பு?

இம்மாதிரி திக்குத்திசை தெரியாத சந்தேகங்கள் உங்கள் மனதில் ஒருநாளும் தோன்றியதில்லையா? சற்றே சிந்தியுங்கள். மறதி எல்லோருக்கும் உண்டு தான்.

நமக்காக உத்யோகமா, உத்யோகத்திற்காக நாமா?

இந்தமாதிரி நீங்கள் நினைத்ததில்லையா? நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள்! சந்தேகம் உண்டாகிறதா?

அப்பாசாமி, ஆடிட்டர் ஆபீஸில் உத்யோகம் பார்க்கிறார். எதற்காக? உயிர்வாழ வேண்டுமே, அதற்காகத்தான். உண்மை, உயிர் வாழ்வதற்கு உணவு எவ்வளவு முக்கியம்? அந்த உணவை வெந்ததும் வேகாததுமாக அள்ளி வாயில் போட்டு விழுங்கிவிட்டு, உட்காரக் கூட நேரமில்லாமல் ஓடுகிறாரே ஏன் தெரியுமா? ரயிலுக்கு நேரமாய் விட்டது. நேரம் பொருத்துப்போனால் துரை கோபித்துக் கொள்ளுவார். வேலை வாயில் மண் விழுந்துவிட்டால்...என்று அவர் நினைக்கும் பொழுதே, கால்கள் அவரை உட்கார இடந்தராமல் இழுக்கின்றன. என்ன செய்வார் பாவம்!

அவரைக் கேட்டால், நமது சௌகரியம் போல் வேலை கிடைக்குமா என்கிறார், நூற்றிலொரு வார்த்தை. வேலையின் சௌகரியம் போல் நீர் நடக்கிறீரா என்று கேட்டால், ஆமாம் என்பதற்கு அவர்



படிப்பகம்

www.padippakam.com

தயங்குவதில்லை. நீங்கள் சொல்லுங்கள், இவர் வாழ்வதற்காக உத்தி-யோகம் பார்க்கிறாரா, உத்தியோகம் பார்ப்பதற்காக வாழ்கிறாரா?

சில உத்யோகத்திற்கு பி.ஏ., பாஸ் பண்ணியவர்கள்தான் மனுச் செய்து கொள்ளலாமென்கிறார்கள். அப்படியானால் அந்த உத்தி யோகத்திற்த பி.ஏ படித்தவர்களா, பி.ஏ படித்தவர்களுக்கு அதுவா

பையன்கள் அதிக மில்லாததால் பள்ளிக்கூடத்தில் வேலைபார்த்த ஒரு உபாத்தியாயர் சீட்டு கிழிக்கப்படுகிறது. ஆகவே இவர் பையன் களுக்காகவே வேலை பார்த்தாரென்று தெரிகிறது. ஆனால் புதிய உபாத்தியாயர் வந்தால் அதிகமான பையன்கள் வந்துசேருகிறார்கள் காரண மென்ன? அவர் கெட்டிக்காரர் என்பது தான். இங்கு உபாத்தியாருக்காகப் பையன்கள் வருகிறார்கள்.

உபாத்தியாயர்களெல்லாம் நாங்கள் இல்லாவிட்டால் பையன்கள் எல்லாம் படித்து முன்னுக்கு வருவதேது? என்கிறார்கள். பையன்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா, நாங்கள் படிக்காவிட்டால் இந்த உபாத்தியாயர்களுக்குப் பிழைப்பேதுஎன்று. இது அவ்வளவு அர்த்த-முள்ள வாதமல்லதான் நமக்கு. உபாத்தியாயர்களுக்காகப் பையன் களா? பையன்களுக்காக உபாத்தியாயரா என்கிற சந்தேகம் உண்டா-கிறதா இல்லையா என்பதுதான் வேண்டும்.

மிராசுதார் மாணிக்கம்பிள்ளை, என்னால் ஆகாத காரியம் என்ன இருக்கிறது என்கிறார். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. அவரிடம் பணம் நிறைய இருக்கிறது. எதைநினைத்தாலும் அவர்செய்யக்கூடும் அடேய் என்றால் ஆயிரம்பேர் கைகட்டிக்கொண்டு வந்துநிற்பார்கள் இவரது பணத்தால் பல மனிதர்களை வரவழைப்பார். வேண்டாதவர் களை அழிப்பதிலும் அவர் பணம் வல்லமை உடையதாகவே இருக்-கிறது. இங்கு பணம் மனிதரை ஆட்டுகிறது.

கணபதி என்னமோ ஏழைக் குடிசையில் பிறந்தவன்தான். தட்டுக்கெட்டுப் படித்து இப்பொழுது பெரிய வக்கீலாயிருக்கிறான். பணம் அவனைத் தேடி வருகிறது. அவன்தன் சொந்தமாக இலட்சக் கணக்கில் சம்பாதித்து விட்டான், சம்பாதிக்கிறான். அவன் வேண்டு மானால் பணம் வருகிறது. விரும்பிய வகையில் செலவில் போகிறது இங்கு மனிதன் பணத்தை ஆட்டுகிறான். அப்படியானால் பணத்தால் மனிதனா? மனிதனால் பணமா?

ரொம்ப தூரம் போவானேன். நீங்கள் வாசிப்பதற்காக நான் கட்டுரை எழுதுகிறேனா? நான் எழுதுகிறதற்காக நீங்கள் வாசிக்கிறீர்களா? ( நன்றி: ஆனந்தபோதினி ஏப்ரல் 1934 )



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தாளர்களுக்கு...

[பிப்ரவரி 1956 சாந்தி இதழில் தொ.மு.சி.ரகுநாதன் குறிப்பிடுவது]

இலக்கியத்தைப் பற்றியோ, இலக்கிய ஆசிரியனைப் பற்றியோ ஒரு விமர்சகன் தான் கொண்டிருந்த கருத்தை மாற்றிக் கொள்வது குற்றம் அல்ல. அது அவ்வாறு மாற்றிக் கொள்பவனின் அறிவு வளர்ச்சியையும், இலக்கிய ஞானத்தையும் பொறுத்தது.

ஒரு எழுத்தாளன் தான் கொண்டிருந்த தவறான கருத்துக்களை உணர்ந்து சரியான கருத்துக்களைப் பெற முயல்வதின் மூலம் மாறுதலுக்கு ஆளாகலாம். அல்லது தான் ஏற்கெனவே கொண்டிருக்கும் கருத்து சரியானதே என்று தெரிந்திருந்தும் கூட, தனது சொந்த விருப்பு வெறுப்புக்களாலோ, ஆபாசங்களாலோ, குரோத விரோதங்களாலோ, மனச்சாட்சியை விற்று விட்டுத் தவறான கருத்தை வலியத் தழுவுவதன் மூலமாகவோ மாறுதலுக்கு ஆளாகலாம். இவ்விரு மாறுதல்களில் அவன் எவ்வித மாறுதலுக்கு ஆளாகிறானோ அதைப் பொறுத்துத் தான் அந்த எழுத்தாளன் வளர்ச்சியடைகின்றானா, அல்லது தேய்ந்து சாகின்றானா என்பதையும் நாம் நிர்ணயிக்க முடியும். நம்மிடையே வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற எழுத்தாளர்களில் சிலர்தாம் இறந்த பின்னும்கூட, தமது பெயரை நிலை நிறுத்திச் செல்வதற்கும், வேறுசிலர் உயிரோடு திரிந்தும்கூட, அநாம தேயங்களாக் வாசகர்கள் நினைவை விட்டு மங்கி மறைந்து மடிவதற்கும் இந்த வளர்ச்சி தேய்வுகளே காரணங்களாகும்,

உண்மையிலேயே ஒரு எழுத்தாளன் தான் கொண்டிருந்த தவறான கருத்தை மாற்றிக் கொள்பவனாக இருந்தால், தனது சென்ற காலத் தவற்றை ஒப்புக் கொள்ளவும், தனது மாறுதலுக்கான காரண காரியத்தை விளக்கி எழுதி வாசகர்களின் உறவையும், அன்பையும் சம்பாதிக்கவுமே பாடுபடுவான். நேர்மையுணர்ச்சியும், கடமை யுணர்ச்சியும் வாய்ந்த எந்த எழுத்தாளனும் தவற்றை ஒப்புக் கொள்ளத் தயங்க மாட்டான். வெட்கப்பட மாட்டான். ஏனெனில் தவற்றை உணர்ந்து தன்னைத் தானே திருத்திக் கொள்வதன் மூலம் அதனை ஒப்புக் கொள்வதன் மூலம் அவன தாழ்ந்து விடுவதில்லை. உண்மையில் அவன் உயர்ந்து விடுகிறான். ஆனால் மனச்சாட்சியை குழிக்குள் தள்ளி மண்ணைப் போட்டு மூடிவிட்டு, தெரிந்தும் தவறு செய்கின்றவனுக்கோ இந்த உணர்வும் துணிச்சலும் ஏற்படுவதில்லை எனவேதான் அவன் நிலை தடுமாறுகிறான்; சீறுகிறான்; தவற்றை மூடி மறைப்பதற்காக தலையைச் சுற்றி மூக்கைத் தொட முனைகிறான். குஷ்டரோகிக்குப் பட்டுப் பீதாம்பரத்தைப் போர்த்திக் கொலுவில் அமர்த்த முனைகிறான். வார்த்தைப்பந்தல் மூலம் வாசகர்களை குழப்பத்தில் ஆழ்த்த முனைகிறான்.



படிப்பகம்

www.padippakam.com

# இதழாளர்களே வருக

இதழ் நடத்துவது உன்னால்/இயலாத காரியமென
ரைக்க சிலர்/ முயன்றுபார் எனக்கரம் கொடுக்க/ இடித்து
-சித்தோம்/ இன்று மூன்றாவது படியில / நிற்கிறோம். முடியும் என்று முயற்
-றாய்.// பழுதான விழுதென எமை சிலர்/ பரிகசிக்கின்றனர்/ வெற்றி வீரர்க
-துக்கள்.// விண்ணைத்தொட என்றும் /விழுதுகள் முயற்சிப்பதில்லை/ வாழ்த்
அதன் இலக்கு/ அதற்குத் தெரியும் // என உயிர் இதழ் எழுதியுள்ளது.

ஒரு இதழ் தொடங்குகிற எவருமே வீழ்வதற்காகத் தொடங்கு
-வதில்லை; வாழ்வதற்காகவே தொடங்குகிறார்கள்.

அவர்களைப் பொருத்தவரை அது அவர்களது சக்திக்கு மீறிய
செயல்தான். ஆனாலும், தமிழகச் சிற்றிதழ்களின் அலைகளுக்கு
இடையில் அவைகள் புறந்தள்ளப் படுகின்றனவே இது ஏன்?
மிகப் பெரிய கேள்விக் குறியிது.

இதழ் தொடங்குபவர்களுக்கு, தொடங்கி நடத்துபவர்களுக்கு,
இதழ்களின் வரலாறு, இதுவரை வெளியான இதழ்கள், அவைகளின்
அமைப்பு, வடிவம், இலக்கு, அழகியல் நோக்கில் அவைகளின்
வெளிப்படுத்து முறை, பக்க அளவு, பக்கங்களைப் பயன்படுத்திய
விதம், கட்டுரையின் தரம், எழுதியுள்ள படைப்பாளிகள், அச்சு
நேர்த்தி, வெளிப்படுத்து முறை — எனப் பல்வேறு இதழியல் நுணுக்
கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

நூறு இதழ்களை ஒன்றாகப் பார்த்து, படித்து, உணர்ந்து அதன்
நுணுக்கங்களை உள்வாங்கி அதன்பிறகு செயல்பட அவர்களது
இதழ் அமைப்பில் வளர்நிலை காணுமல்லவா?

இந்த நோக்கில்தான் சிற்றிதழ்ச் செய்தி ஆய்வு இதழ் இதழாளர்
களுக்கு உதவுற வகையில் சிற்றிதழ்களைச் சேகரித்து வருகிறது.

தற்பொழுது சேகரிப்பில் 1990 வகையான தமிழ்ச் சிற்றிதழ்கள்
சேர்ந்துள்ளன. இதில் ஒரு நூறு இதழ்களைப் பார்த்தாலே போதும்
அதுவே தெம்பூட்டுவதாகவும், வழிகாட்டுவதாகவும் அமையும்.

பொள்ளாச்சியிலுள்ள சி.செ.நூலகத்திற்கு வந்து [சனி, ஞாயிறு]
இதழாளர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்ளவும். தங்களது
வருகையைக் கடிதம் எழுதி உறுதி செய்துவிட்ட பிறகு வரவும்.

சி.செ.நூலகம் இதழாளர்களுக்கானது. பயன் படுத்த தமிழ்ச்
சிற்றிதழாளர்களை அன்போடு அழைக்கிறேன்.

என்றும் அன்புடன்,

பொள்ளாச்சி நசன்.

படிப்பகம்

www.padippakam.com

# நாடகம் பலவிதம்

- மொழி நடையைக் கொண்டு நாடகங்களை:

1] பாடல் நாடகங்கள் (18,19ம் நூற்றாண்டு இசைப்பாடல் வகை)

2] பாடல் இசை நாடகங்கள் (19ம் நூற்றாண்டு இறுதி— 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, பாடலாலும் உரையாலும் ஆக்கப் பட்டது. சங்கரதாஸ் சுவாமிகளின் வள்ளி திருமணம், கோவலன், சதி அனுசுயா மற்றும் பிரகலாதன்)

3] உரைநடை நாடகங்கள் (20 ம் நூற்றாண்டில் முழுமையான உரைநடை. பம்மல் சம்பந்த முதலியாரின் ராஜராஜசோழன், பூவுக் குள் பூகம்பம், ஊஞ்சல் மணம், வீர சுதந்திரம்)

4] கவிதை நாடகங்கள். (1891ல் பேரா. சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணியம் நாடகத்தைப் பின்பற்றி கனகை, இரவிவர்மன், மறைந்த மாநகர், புகழேந்தி, பால்மதி, மாநலன், அனிச்சஅடி, புலவர் உள்ளம், அன்னிமிஞலு படைக்கப் பட்டுள்ளன.

5] உரைநடைகலந்த கவிதைநாடகம் (கவிதைகளுக்கு இடையில் உரைநடை. பெருமாள் எழுதிய பெரியவெற்றி, மாபெரும் அறம்)

6] சிறுவர் நாடகங்கள் (தணிகை உலகநாதன், கூத்தபிரான், அழ வள்ளியப்பா, பூவண்ணன், அகமதுபஷீர், ஆலந்தூர் மோகனரங்கன் ஆகியோரின் சிறுவர் நாடகங்கள்)

- நடித்துக் காட்டப்படும் சாதன அடிப்படையில்:

மேடை நாடகம் ○ வானொலி, ○ தொலைக்காட்சி நாடகம்

- நாடகங்களின் மொத்த அளவைக் கொண்டு:

ஓரங்க நாடகம் ○ குறு நாடகம் ○ பெரு நாடகம்

- நாடக முடிவைக் கொண்டு:

இன்பியல் ○ துன்பியல் (பம்மல்—இரு நண்பர்கள், சகோதரன்)

- சமய நாடகங்கள்:

புராணப் புதுக்கல் [நந்தனார் கதை] ○ இதிகாச நாடகம்

- சமூக நாடகங்கள்:

குடும்ப சார்பு [மெரினாவின் தனிக்குடித்தனம், சாமியாரின் மாமி -யார், சம்பந்த முதலியாரின் பொன் விலங்குகள், அ.மாதவையாவின் பாரிஸ்டர் பஞ்சநாதம். ஏர்வாடியாரின் பணம், பணம், பணம்.

சமூகப் பிரச்சனை [அரு. இராமநாதனின் வானவில், தா.ஏ.ஞான மூர்த்தியின் பொன்மலர், அண்ணாவின் நல்ல தம்பி]



படிப்பகம்

www.padippakam.com

○ சாதிப் பண்பு [ஆ.று.அழகப்பனின் கறிவேப்பிலை, சி.சு.செ யின் முறைப்பெண், பூவை .எஸ்.ஆறுமுகத்தின் கஞ்சிக்கலையம்]

### வேறு வகைப்பாடுகளில் நாடகங்கள்

○ வேகவுணர்ச்சி நாடகம் [பி.எஸ்.இராமையாவின் போலீஸ்காரன் மகள், பூவிலங்கு நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம்]

○ துப்பறியும் நாடகம்[வ.தண்டபாணியின் காற்றில் வந்த கடிதம்]

○ மணவினை நாடகம்[அ.மு.பரமசிவானந்தத்தின் காமக்களிமகன் கோமஸ், அகிலனின் வாழ்வின் இன்பம்]

○ உளவியல் நாடகம்[பெரியசாமியின் மனக்குகை, வ.சுப.மாணிக்கத்தின் நெல்லிக்கனி]

○ அங்கத நாடகம்[பம்மல் சம்பந்த முதலியாரின் சபாபதி நாடகம், சபாபதி துணுக்குகள், துவிபாஷி சபாபதி]

○ நாடக நையாண்டி[பம்மல் சம்பந்தரின் சந்திரஹரி(1923)]

○ நகைச்சுவை நாடகம் [பம்மல் சம்பந்தரின் சதிசக்தி, சங்கீத பைத்தியம், ஸ்திரி ராஜ்யம், வைகுண்ட வாத்தியார்]

○ வாழ்க்கை வரலாற்று நாடகப் [சம்பந்த முதலியாரின் புத்த அவதாரம், மு.வ.வின் பச்சையப்பர், ஆ.று.அழகப்பனின் திருவள்ளுவர் கு.அழகிரிசாமியின் கவிச்சக்ரவர்த்தி கம்பர், எத்துராஜுலுவின் ஔவையார், பி.கே.சுப்பாராஜின் வீரபாண்டிய கட்டபொம்மன்]

○ அறிவியல் நாடகங்கள்[காவிரி நாடனின் கடவுளின் எதிரிகள், சுஜாதாவின் கடவுள் வருகிறார்]

○ இலக்கியச் சார்பு நாடகங்கள்[பழனியின் அனிச்ச அடி, சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம், புலவர் குழந்தையின் காமாஞ்சரி, பாரதிதாசனின் பிசிராந்தையார், சேர தாண்டவம், பெரியசாமித் தூரனின் ஆதி சுத்தி, பா.கிருட்டிணனின் வள்ளல் பேகன்]

○ கட்டுக்கதை நாடகம் [பம்மலாரின் பாடலிபுரத்துப் பாடகர்கள்]

○ மொழிபெயர்ப்பு நாடகங்கள்

○ தழுவல் நாடகங்கள்[எஸ்.இராசுசெட்டியாரின் பாரியும் கபிலரும் சி.முத்தையா முதலியாரின் இராஜ இராஜேஸ்வரி, வடுவூர் கே.துரைசாமியின் மங்கையர் பகட்டு]

○ மென் தழுவல் நாடகங்கள் [விபுலாநந்தரின் மதங்க சூளாமணி]

நன்றி: டாக்டர் ஏ.என்.பெருமாள்/கலைமுகம் இதழ், ஆடி 1994.



படிப்பகம்

www.padippakam.com

## ❋ நிவேதினி ❋

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் ஒரு அரசாங்க சார்பற்ற பெண்களுக்கான அமைப்பு. இதன் சார்பில் நிவேதினி இதழ் வெளி-யிடப் படுகிறது. மேலும் பெண்ணியம் தொடர்பான பல சிறந்த நூல்களும் வெளியிடப்படுகின்றன. செல்வி திருச்சந்திரனின் பெண் விடுலை வாதத்தின் பிரச்சனை மையம் அது ஒரு மேலைத் தேயக் கோட்பாடு, பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமை-யின் விளக்கமும்., சாந்தி சச்சிதானந்தத்தின் பெண்களின் சுவடி களிலிருந்து சில அடிகள்., சந்திரிகா சோமசுந்தரத்தின் மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்., சித்ரா மௌன குருவின் பெண் நிலைச் சிந்தனைகள் — என்பன சமீபத்திய நூல்களாகும்.

தொடர்பு முகவரி: Women's Education and Research Centre
58. Dharmarama Road, Colombo-6

●○● தமிழ் மக்களை இத்தனை இன்னல்படுத்தி, அல்லல் படுத்தி வன்முறைவழி வென்றுதான் அவர்களைப் புலிகளிடமிருந்து பிரிக்க வேண்டுமா? இதனால் தமிழ் மக்களை அரசாங்கம் அந்நியப் படுத்துகிறது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வில்லையா? இத்தனை காலமும் இன்னல் அனுபவித்த யாழ்ப்பாணத் தமிழரை கொடுமையாக அரசாங்கம் மேலும் துன்புறுத்துகிறதே — புலிகளில் உள்ள கோபத்தை எங்களிடம் காட்டுகிறதே அரசாங்கம், என்று தானே தமிழ் மக்கள் கணக்குப் போடுவார்கள். இது தப்புக்கணக்கு அல்ல என்றுதானே அவர்கள் வாதாடுவார்கள். இதனை அரசுக்கு எடுத்துக் கூறும் ஆலோசகர்கள் இல்லையா?

❋ நன்றி: நிவேதினி, மலர் 2, இதழ் 2, மார்கழி 1995.

●○● தாழ்த்தப்பட்ட மக்களின் போலித்தலைவர்களையும் பிற்படுத்தப்பட்ட மக்களின் போலிப் புரட்சியாளர்களையும் இனம் கண்டு கொண்ட, இருதரப்புப் புதிய இரத்தமும் ஒன்று கலந்து விடுமோ என்ற பயத்தில், நவசனாதினிகள் — தலித் — என்ற தனிமைப்படுத்தும் முழக்கத்தை முன் வைக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டோரின் விடுதலையின்றி. தமிழரின் இன விடுதலை சாத்தியமில்லை என்ற தத்துவத் தெளிவோடும், தியாகத்திற்குட் பட்ட நடைமுறைகளோடும் பிற்படுத்தப்பட்ட சாதி மக்களின் புதிய இளைஞர்கள் முன்வரும்போது தலித் என்ற முள்வேலி வஞ்சகமாக இடையே விரிக்கப்படுகிறது. நன்றி: சிந்தனையாளன், ஏப்.96.



படிப்பகம்

www.padippakam.com

# கருப்பண்ணபிள்ளை பரமசிவம்.

வீரகேசரி நாளேட்டில் கடந்த 32 வருடங்களுக்கும் மேலாக கண்டி நிருபராகவும், பல்வேறு சஞ்சிகைகளில் முத்திரை பதித்தும், மலைமுரசு இதழ் வழி பல எழுத்தாளர்களை உருவாக்கியுமுள்ள க.ப சிவம் அவர்களின் பெயர் கருப்பண்ணபிள்ளை பரமசிவம்.

இவர் 1958 ல் காலஞ்சென்ற மலையகக்கவிஞர் எஸ்.எஸ்.நாத -னின் பகுத்தறிவு என்ற ஏட்டில் மலையக மக்கள் பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார். பெ.சாமியின் நாம், சமூகமுன்னேற்றம், வி.எஸ்.முரு -கனின் உரிமைக்குரல் ஆகிய இதழ்களிலும் கட்டுரைகள் எழுதியுள் -ளார். 1959 ல் அமரர் பி.டி.ராஜன் தொடங்கிய மலைநாட்டு நல் வாழ்வு வாலிபர் சங்கத்தின் கண்டிக்கிளை செயலராக இருந்துள்ளார்

கவிஞர் ஈழக்குமாரை இணைத்துக் கொண்டு முத்தமிழ்முழக்கம் இதழ்வழி பல படைப்பாளர்களை ஊக்குவித்தார். இவ்விதழ் தடை செய்யப்பட்டபோது மலை முரசு என்ற பெயர் மாற்றத்துடன் வெளி வந்து பல படைப்பாளிகள் உருவாகக் களம்அமைத்துக் கொடுத்தது மலையக வரலாற்றில் முதன் முறையாக, மலையகச் சிறுகதை, கவிதை, நாடக, கட்டுரைப் போட்டிகளை நடத்தியுள்ளார். மலையக எழுத்தாளர்கள் சந்திப்பையும் ஏற்பாடு செய்துள்ளார். 1963 ல் சிவ கலா மன்றத்தைத் தொடங்கி மருத்துவப் பேராசிரியரும் எழுத்தாள -ருமான நந்தியின் குரங்குகள் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

1986 ல் பத்திரிகை முன்னோடி என்ற பட்டமும், 1992ல் தமிழ் மணி பட்டமும் பொற்கிழியும் பெற்றுள்ளார். மலையக உணர்வுடன் ஆக்ரோஷமான குரலில்[தொண்டை கிழிய]பேசும் இருவரில் ஒருவர் டொமினிக் ஜீவா; மற்றவர் க.ப.சிவம். நன்றி: கலாநிதி துரை மனோகரன் — ப்ரிய நிலா ஜூன்-ஆக 94 அட்டைப்படக் குறிப்பு.

# இலக்கிய இழப்புக்கள்

- சில்லையூர் செல்வராஜன்: அறுபதுகளில் சிலேடைக் கவிதைகள் மூலம் சமூகப் பிரச்சனைகளை வெளிப்படுத்தியவர். புனை பெயர் தான் தோன்றிக் கவிராயர். கவியரங்கக் கவிஞர். பல்கலை வேந்தர்
- எஸ்.அகஸ்தியர்: சிறுகதை, நாவல், குறுநாவல், உணர்வூற்றுச் சித்திரம் என 4 தசாப்தங்களாக எழுதிக் கொண்டிருந்தவர். பாரிசில் வாழ்ந்த, புலம் பெயர்ந்த எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர்.

நன்றி: பெண்ணின் குரல், ஜன96, பெண்களின் உரிமைக்கான இதழ்



படிப்பகம்

www.padippakam.com

● சிரித்திரன் இதழாளர் சுந்தர். [ 3.3.1924 — 3,3.1996 ] செய்தொழில் தெய்வம்; சிரிப்பே சீவியம் என்ற மேற்கோள் வாக்கி-யத்துடன், கடந்த 34 வருடங்களாக யாழ்நகரிலிருந்து வெளியான நகைச் சுவைச் சஞ்சிகையின் ஆசிரியர் இவர். கார்ட்டூன் வாயிலாக தானே வரைந்து, கருத்தைச் சுட்டியவர். நன்றி: ஈழமுரசு இதழ் 60

● பிரக்ஞை இதழாளர் ஆர்.ரவீந்திரன்[17.2.45 — 30.12.95] அக். 74 முதல் பிப். 78 வரை வெளிவந்த 41 பிரக்ஞை இதழ்களுக்கு ஆசிரியராக இருந்தவர். தலையங்கங்கள், திரைப்படவிமர்சனங்கள் பத்திரிகை மீதான விமர்சனம் எழுதியுள்ளவர். நன்றி: காலச்சுவடு 13

நாற்று பெண்கள் இதழில், செல்வி பேபிவேலுப்பிள்ளை ......

○ ''திருமணம் என்ற ஒன்றின் மூலம்தான் பெண்மை பூரணத்துவம் அடைகிறது'' — எமதுசமூகத்தில் மிகஆழமாக வேரூன்றியிருக்கும் இக் கருதுகோள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

● திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு அங்கமேதவிர வாழ்க்கையே திருமணம் அல்ல. பெண்கள் குழந்தைகள் பெறவும், போகத்துக்கும் மட்டுமே உரியவர்கள் என்ற ஆண்நிலைச் சிந்தனைதான் எமது சமூகத்தின் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம். எமது இனவிருத்திக்கு கரு உற்பத்தி மிகவும் அவசியம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அறிவற்ற ஆளுமை விருத்தியற்ற கரு எமது சமூகத்திற்குத் தேவையற்றது. வெறும் பிள்ளைபெறும இயந்திரங்களாகப் பெண்-களைப் பார்க்கக்கூடாது. சமூகத்தின் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் சமூகத்தில், தனது தேசத்தில் அக்கறை இருக்க வேண்டும். பாலியல் உணர்வுகளிற்கு வடிகாலாக மட்டும்தான் ஒரு குடும்பஅமைப்பு தேவையெனில் அது எமக்கு அவசியம் இல்லை. தனது ஆளுமையை வெளிப்படுத்துவதற்கும் சமூகமுன்னேற்றத்திற்-கும் பாடுபடும் உணர்வுகொண்ட ஒருபெண்ணிற்கு தனதுதிருமணம் அந்த உணர்வுகளைச் சிதைக்கும் என்று கண்டால் எதை விடவேண்-டும் என்ற தெளிவு பெண்ணிடமே விடப்பட வேண்டும். இந்தத் தெளிவு அவள்தீர்மானத்திலுள்ள தெளிவில் தங்கியிருக்கிறது. அவள் எந்தத் தவறுமே செய்யாத நிலையில் சமூக நிலைப்பாட்டிற்கு அஞ்ச தேவையில்லை. திருமணம் செய்யாது ஒழுக்க நிலையில் நின்று அச் சமூக முன்னேற்றத்திற்கு சேவைசெய்த செல்விகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். சமூக சேவையும் வேண்டும், அதற்கு தடை சொல்லாத அனுசரணையுடன் கூடிய கணவனும் வேண்டும் என்று அவள் விரும்பினால் அது அவளுக்கு ஒரு சாபக்கேடுதான். ஆனால் புரிந்துணர்வுடன் கூடிய கணவனைக் கொண்டுள்ள பெண்களும் எம்-மிடையே உண்டு. ஆனால் எண்ணிக்கை குறைவுதான். [எரிமலை]



படிப்பகம்

www.padippakam.com

# ❋ நாடக வெளி ❋



★ இதழாசிரியர் : ரங்கராஜன் ★

❋ நாடகத்தை முதன்மைப்படுத்தி, நாடகப் பிரதிகளையும், நாடகம் தொடர்பான பல்வேறு குறிப்புகளையும் மிகத்தரமாக வெளியிட்டு வருகிற இருமாத இதழ் நாடக வெளி ஆகும். 1990 செப்-அக், ல் தொடங்கி இதுவரை 32 இதழ்களை வெளியிட்டுள்ளது.

வெளி ஆசிரியர் ரங்கராஜன் அவர்களை, சென்னையில் அவரது இல்லத்தில் சந்தித்தபோது, வியாபாரநோக்கில்லாது, தரமான நாடக பிரதிகளை நூலாகவும்/இதழிலும் வெளியிட வேண்டும் என்ற அவரது வேகம்/நுட்பம்/ஆற்றல் அறிய முடிந்தது. நாடகத்திற்கான தரமான தமிழ்ச் சிற்றிதழ் தமிழக/உலக அளவில் வேறு எதுவுமில்லை.

கூத்துப்பட்டறை அமைப்பின்மூலம் மரபுக்கலைகளுக்கும் நவீன நாடகங்களுக்குமிடையே ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகிற ந.முத்துசாமியின் பேட்டியுடன் முதல் இதழ் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு இதழிலும் 1,2 நாடகத்தின் முழுப்பிரதியையும் வெளி-யிட்டு வருகிறது. நடுக்கடல், கூட்டியக்கம், குகை, குதிரைக்காரன் கதை, ஊர்வலம், ஒரு நடுக்கமான மீட்சிக்கு, சாட்சியின்மையைத் தோண்டியெடுத்தல், எப்போ வருவாரோ, மகாத்மா காந்தியின் 5 வினாடிகள், அகாலத்தில் வந்தவர்கள், உருளும் பாறைகள், பனிவாள், உடலுக்கப்பால், நாணயம் இல்லாத நாட்டில், ஆற்றை கடத்-தல் என்ற நாடகங்கள் மறக்க முடியாதவைகள். படித்த நாடகப்பிரதி-களை ரேடியோவில் கேட்டபோதும், கோவை சுபமங்களா நாடக நிகழ்வில் பார்த்தபோதும் அடைந்த மகிழ்விற்கு எல்லையேயில்லை. மொழிபெயர்ப்பு/படைப்பாக்க நாடகங்கள் இவ்விதழில் பாதுகாக்கப் படுவது நாடக வரலாறு காட்ட உதவுகிற அரிய செயலேயாகும்.

தரமான விமர்சனம், செறிவான இலக்கியப் படைப்பிற்கும், நுணுக்கமான அணுகுதல்களுக்கும் வழிவகுக்கும். இந்நோக்கில் கோணிக்காரன், பல்லக்குத்தூக்கிகள், பாரததர்மம் எனத்தொடர்ந்த நாடக விமர்சனங்கள் நாடகங்களின் பல்வேறு கூறுகளை ஆக்க பூர்வமாக அணுகி, நாடக்கலைக்குச் செழுமை சேர்க்கிறது.

நாடகம் தொடர்பான தரமான கட்டுரைகளையும் இவ்விதழ் வெளியிட்டுள்ளது. தமிழ் நாடகக்கலை, நாடகமும் சினிமாவும்,



படிப்பகம்

www.padippakam.com

சங்கரப்பிள்ளை நாடக ஆசை, முரணியல் நாடக முன்னோடிகள், அபத்த நாடகங்கள் எனத் தொடர்ந்த நாடகக் கட்டுரைகள் நாடக வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாக இருப்பவைகளே.

டெல்லியில் நடந்த அகில இந்திய நாடக விழாவில் மேடையேற் -றப்பட்ட அனைத்து இந்திய மொழிகளின் நாடகப் பட்டியலில் தொடங்கி, ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்தப்படுகிற நாடகங்களின் பட்டியலை வெளியிட்டு, நாடகப் பதிவேடாக இவ்விதழ் விளங்கு கிறது. இதன் 17 வது இதழ் தென்மண்டல நாடக விழாச் சிறப்பித -ழாக மலர்ந்துள்ளது. இயங்கி வருகிற பல்வேறு குழுக்களையும், விற்பன்னர்களையும் இதழில் அடையாளம் காட்டுகிறது. யவனிகா, ஆடுகளம், அரூபம், தீட்சண்யா, ஆழி, பரிக்ஷா, ஆட்டக்காரர்கள், களம், யதார்த்தா, பல்கலை அரங்கம், கூத்துப்பட்டறை கலாஷேத் ரா, ஆப்டிஸ்ட் என நாடகக் குழுக்களை அடையாளம் காட்டுகிறது.

வேலு சரவணன், நிஜந்தன், பெண்ணேஸ்வரன், ருத்ரன், ஞாநி. பிரளயன், அ.மங்கை, கே ஏ.குணசேகரன், ராஜன்குறை. ஆறுமுகம் பேரா.இராமானுஜம், இராசு, அ.ராமசாமி என இயங்குகிற நாடகச் சிந்தனையாளர்களை இதழ்வழி அறிய முடிகிறது.

இரண்டு நாடகக் கருத்தரங்குகள் என புதுச்சேரி பல்கலைக் கழக சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப் பள்ளியில் நாடகவியலார் சந்திப்பையும், சென்னையில் அம்பலம் கலாச்சார அமைப்பும் வெளி இதழும் இணைந்து நடத்திய கருத்தரங்கு பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

நடைபாதை நாடகவிழா என கல்கத்தாவில் பாதல் சர்க்கார், சோதனை முயற்சியாக நடைபாதையில் நிகழ்த்திய 7 நாடகங்கள் பற்றிய குறிப்பையும்/வெற்றியையும் சுவையாகத் தந்துள்ளது.

தமிழ்நாடு நாடகப் பட்டறை அனுபவங்கள் என நியூயார்க் பல் கலைக் கழகத்தில் 12 நாள் நாடகப் பட்டறை அனுபவம், சங்கீத நாடக அகடமியின் நெறியாள்கைப் பயிற்சிப் பட்டறை, புதுச்சேரி -யில் நடந்த சங்கீத நாடகஅகடமியின் நாடகப்பிரதியாக்கப் பயிற்சிப் பட்டறை, அனுபவக் குறிப்புகளை வெளியிட்டுள்ளது.

அக்டோபர் 94 கொழும்பில் நடைபெற்ற தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் நாடகக் கருத்தரங்கிற்கு, பேரா.ராமானுஜம், ந.முத்து சாமி, இரா.இராசு, பிரசன்னா ராமசாமி, வெளி ரங்கராஜன் கலந்து கொண்டு கட்டுரை படித்தது பெருமைக்குரிய செய்தியே.

யாழ் திருமறைக் கலாமன்றம் வெளியிடுகிற கலைமுகம் இதழ் வெளி இதழ்க் கட்டுரைக்கான ஆக்க பூர்வமான எதிர்வினை புரிந்து



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறது. குழந்தை ப.சண்முகலிங்கம், கோகிலா மகேந்திரன், நா. சுப்பிரமணியன் கலந்துகொண்ட ஈழத்தமிழ் நாடகம் என்ற கலந்துரையாடலை இதழில் வெளியிட்டுள்ளது. கலைமுகம் இதழின் மறுபிரசுரமான கி.பி. 2000ல் இலங்கைத்தமிழ் நாடகம் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

நாடக நூல்கள் பற்றிய குறிப்புகளைத் தொடர்ச்சியாக வெளி-யிட்டு வருகிற இவ்விதழ் தனது இதழ் பதினொன்றைகோட்டையூர் ரோஜா முத்தையா அவர்களின் நினைவுஇதழாக வெளியிட்டு, அவர் தொகுப்பிலுள்ள கிடைத்தற்கரிய, நாடக நூல்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது வணங்குதற்குரியதே........

ந.முத்துசாமி, பி.வி.கரந்த், யூஜின் அயனெஸ்கோ, தோப்பில் பாலி, எஸ்.கே.எஸ்.மணி, உத்பல்தத், அல்காஷி — என நாடகத் தொடர்பாளர்களைப் பேட்டி கண்டு பதிவு செய்துள்ளது.

இவ்வாறு நாடகப் பிரதிகளையும், விமர்சனம், கட்டுரை. நூல்கள் விபரம், நாடகக்குழுக்கள், கருத்தரங்குகள், பயிற்சிவகுப்புகள் என நாடகத்திற்காக இயங்கி வருகிற இவ்விதழ் வாழ்த்துதற்தரியதே

இதழ் முகவரி:—
[ 1415 2 வது தெரு, முதல் விரிவு, கே.கே.நகர், சென்னை, 78]
ஆண்டு நன்கொடை: ரூ 45

---

★★ டாக்டர். கா.பொ.இரத்தினம் நடத்திய இதழ்கள். ★★
[ உலகத்தமிழ் மறைக்கழகம், எச் 12/9 கல்லாசேத்ராகுடியிருப்பு, பெசண்ட் நகர், சென்னை 90 ]

❋❋ விடுதலைப் பரணி ❋❋ 1964 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரச்சார ஏடாகத் திங்களிருமுறை மலர்ந்துள்ளது. இதில் சிங்களஅரசே சிந்தித்துச் சொல் என்ற ஆசிரியருரை வெளியானது.
❋❋ உண்மைக்குரல் ❋❋ 1972 இல் தொடங்கி வார, திங்கள் இதழாகத் தொடர்ந்து 2 ஆண்டுகள் வெளியானது.

●★● தொடருகிற சிற்றிதழ்கள் ●●★

கோபுரம். புளியங்குடியிலிருந்து தொடங்கியுள்ள காலாண்டிதழ்.
இலக்கியப்பூக்கள். இரெ.அய்யம்பாளையம் கையெழுத்து இதழ்.
பொற்கிளி. இலக்கிய விருப்புடன் காலாண்டிதழாக மாறியுள்ளது.
களரி. பட்டுக்கோட்டை அனைத்திந்திய தமிழ்எழுத்தாளர்சங்க ஏடு
தமிழோசை. உ.த.ப.கழக சேலம் கிளை சார்பில் வெளியானது.



படிப்பகம்

www.padippakam.com

சதங்கை. வனமாலிகையின் இடைவிடாத முயற்சியின் பிரதிபலிப்பு.
சாமந்தி. ஊத்துக்குளியிலிருந்து வரும் கல்லூரி மாணவரிதழ்.
மாதியப்பாவை. அருந்ததியர் வரலாறு/நலம் பேணும் தரமானஇதழ்
எழுச்சி. அம்பேத்கர் கொள்கை விளக்க/மக்கள் இணைப்பு இதழ்.
மக்கள் செங்கோல். தலைநகர் தமிழ்ச்சங்கத்தின் தொடர்பு இதழ்.
மையம். 84ல் தொடங்கி 3இதழ்களைத் தரமாகவெளியிட்டஇத்ழிது
பறை. மிகத்தரமான தலித் இதழாக, நெல்லையிலிருந்து வருவது.
காதம். தமிழின இளைஞர் முன்னணியின் தொடர்பு இதழ்.
பாசறை. சென்னை நண்பர்களின் கூட்டமைப்பு இலக்கிய முயற்சி.

●❊★○€ மற்றும்..........

அகரம், அறிவுவழி, அச்சமில்லை, அந்தமான் முரசு, அடையாளம், அறிவே துணை, அருணன், அரசகட்டளை, ஆரோக்கிய வாழ்வு, ஆன்மசக்தி, இனஉறவு, இனி, இளங்குயில், இளங்கதிர், இலக்கியக் குடும்பம், உயிர், உங்கள் உடல் நலம், உங்கள் ஹோமியோ நண்பன் உங்கள் தூதுவன், உங்கள் கவிதைக்காரன், உழைக்கும் மக்கள் தமி-ழகம், உன்னதம், ஊற்று, எரிமலை, ஈழமுரசு, ஏழைதாசன்.

கணையாழி, கனவு, கன்மலை, கவிக்கோலம், கவிதை, கவிதை உறவு, கலையருவி, கண்ணியம், கவித்வா, கம்பம் நிலா, கலைச் சுரங்கம், காலச்சுவடு, காவிரித் தென்றல், கேரளத்தமிழ், சதங்கை, சங்கொலி, சலங்கை, சமாதானவழி, சாப்பறை சிவா, சித்தாஉலகம் சிந்தனையாளன், சிறை, சுவடு, சுந்தர சுகன், சென்ற வாரம், சைவ சிந்தனை, சோலைக்குயில், தமிழர் முழக்கம், தமிழ்ப்பாவை, தமிழ் முனிவன், தன்னம்பிக்கை, தலைமகன், தமிழ்ப்புதுவை, தமிழ் முரசு, தாழம்பூ, தாராமதி, திருப்பூர் செய்திச்சரம், தீன்தமிழ், தீவட்டி, தூறல், தெளி தமிழ், தேனமுதம், தோழி, பப்ளிசிட்டி, படர்கதை, பாரதி, பாணன், புதியகுரல், புறப்பாடு, பொதுமறை, பொற்கிரி பொள்ளாச்சி ப்ரீ டைம்ஸ், ராஜகுரு வருகிறார், லயம், வளரும் தமிழ் உலகம், வள்ளியூர் டைம்ஸ், விடியல், விழுது, விஸ்வரூபம், வீணை, வைகைக் குயில். வைகைத் தென்றல். வெல்லும் தூயதமிழ். வெண் புறாச் செய்திமடல். ஞெகிழம். மள்ளர் மலர். மருத்துவ அறிவியல் மலர். மகாகவி. மக்கள் மன்றம். மனித உரிமை முரசு, மாலைக்கதிர் மீண்டும் கவிக்கொண்டல். முகம், முதல் முரசு. மைசூர் முரசு. நதி. நமது அலை. நவீன விருட்சம். நாடக வெளி. நாடார் குல தீபம் நிலா. நிவேதினி. நிழல். நீலகிரி நியூஸ். நெசவு. நூலகம் இலக்கியம். ஜவஹர் யுகம், [விடுபட்ட இதழ்கள் இருப்பின் தகவல் தரவும்]



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வுகள்

★ 19.3.96. எழுத்தாளர் தின விழா. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்க புதுச்சேரி மாநிலக்கிளை சார்பில் நடந்தது.

★ 31.3 96. தொடரும் இதழின் இலக்கிய விழா, பிரபஞ்சன், ஜெயகாந்தன் பங்கேற்ற தொடரும் இதழின் 6 ம் ஆண்டு விழா

★ 31.3.96. பாசறை திங்களிதழ் வெளியீட்டு விழா.

★ 7,8.4.96. மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் 11 வது ஆண்டு மாநாடு. பங்கேற்பு: பொன்னீலன், வீரா.பாலச்சந்திரன்

★ 7.4.96. வைகைக்குயில் வாசகர்கூட்ட சந்திப்பு.

★ 12.4.96. சென்னை இலக்கியச் சிந்தனை 26 ஆம் ஆண்டு நிறைவு விழா. பாவண்ணனின் பாய்மரக் கப்பல் நாவல், இரா. நடராசனின் ரத்தத்தின் வண்ணத்தில் சிறுகதைக்குப்பரிசளிப்பு விழா. இரா.மோகனின் நூல் வெளியீடு.

★ 15.4 96. கம்பம் நகரில் காகம் இதழ் வெளியீட்டு விழா.

★ 28.4.96. நெசவு ஒளிப்பட இதழின் 4 ஆம் ஆண்டு விழா.

★ 28.4,96. ஈரோடு கலை இலக்கியக் கூட்டமைப்பின் சார்பில் தலித் கலை இலக்கியம் அரசியல் நூல் விமர்சனக் கருத்தரங்கு

# வந்த நூல்கள்

○ புன்னகை புரியும் இளவரசி. காஷ்மீரி. பஞ்சாபி, இந்தி —என அனைத்திந்திய 15 சிறுகதைகளை சா.தேவதாஸ் தமிழில் மொழி பெயர்க்க, நெய்வேலி மருதம் வெளியிடு நூலாக்கியுள்ளது. ரூ. 45. விற்பனை உரிமை: வேர்கள் இலக்கிய இயக்கம், நெய்வேலி.

○ உயிர்த்திரு. புதுக்கவிதைத் தொகுப்பு, ரூ. 40. சேலம் 2 ன் ஆர்.குப்புசாமி[ஆர்.கே] யின் படைப்பாக்கம். [ஊதல்— பலூன்/ ஒரு அதிசயமான பிறவி/ ஊதாவிட்டால்/ இருக்குமிடம் தெரியாது/ ஊதிவிட்டால்/ தன்னைத் தவிர/ வேறொன்றும் தெரியாது.]

○ பெண்ணுரிமைப் போர். ஓவியா, அன்றில் வெளியிடு- 2. ரூ.5 அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு, அதனையே சாதி, சமய நெறி முறைகள் எனும் போக்கினை உடைத்தெறியப் பயனாகும் போர்வாள்

○ புதிய நெருப்பு. பாரதி வசந்தனின் தேர்தல் சிந்துப் பாடல்கள்.

○ இந்திய ஜனநாயகமும் அரசியல் சட்டமும். கருணாமனோகரன் வெளியிடு சமூக நீதி பதிப்பகம், திருப்பூர். விலை. ரூ. 7.

○ நினைவுகளுக்குப் பின். வனகைதி நேசனின் புதுக்கவிதைகள்.



படிப்பகம்

www.padippakam.com

சிற்றிதழ்ச் செய்தி ஆய்வு இதழ் ★ தனிச்சுற்றுக்கு ★ ஜனவரி 96.

பதிவு பெற்ற இதழ் ❋★❋ பதிவு எண் : 72584/93/இ1

# நொண்டிப் பிழைப்பு

தெரு நாய்கள் விரும்பும் போது புணர்கின்றன,
வீட்டு நாய்கள் குறியை வெளித்தள்ளித் தள்ளி
ஏக்கமாய்க் குரைக்கின்றன
அவைகள்
நம்மை அண்டியுள்ளன.
முட்டைகளை இழந்த சோகம்
கோழிகளைப் போல
காக்கைகளுக்கு ஏற்படுவது அபூர்வம்
காக்கைகள் நம்மிடம் வளர்வதில்லை.
பொம்மைக் கன்றுவைப் பார்த்து
பால் சுரக்கும் பரிதாபம்
காட்டெருமைகளுக்கு ஏற்பட்டதில்லை.
அவைகள் வனங்களில் வாழ்கின்றன.
ஆடுகளுக்கு எப்போதும் அகால மரணம் தான்.
யாருக்கும்,
எப்போதும்,
அண்டிப் பிழைத்தால்
நொண்டிப் பிழைப்புதான்.

— பக்தவச்சலம் —

நன்றி: கனவு, இதழ். 25. மார்ச் 1996

ஆசிரியரும் வெளியிடுபவரும் : பொள்ளாச்சி நசன்,
இதழ் முகவரி: 1,சம்பத்நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி- 6.
அச்சமைப்பு: நசன்அச்சகம், பொள்ளாச்சி-6. அ.கு.எண் 642 006

படிப்பகம்